10 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலத்தின் 5 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்: **நிறைவான வாழ்வு**

## கடவுள் நம்மோடு வழி நடக்கிறார்

யானா ரோஸ் பாடிய மிகவும் புகழ் பெற்ற பாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதனுடைய வரிகள் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

நீ எங்கே போகிறாய் என்று உனக்குத் தெரியுமா?
வாழ்க்கை உனக்கு காட்டும் விஷயங்களை நீ விரும்புகிறாயா?
எங்கே போகிறாய்?
உனக்குத் தெரியுமா?....



எங்கே போவதென்று வழி தெரியாமல் குழப்பத்தில் இருக்கும்போது, இந்தப் பாடல் வரிகள் என் நினைவுக்கு வரும். என் வாழ்வின் தனிப்பட்ட சவால்கள் அல்லது பிரச்னைகளை நான் சந்திக்கும்போது, இந்தக் கேள்வி என்னுள் அடிக்கடி எழும். என்னுடைய கடைசி கேள்வி எப்பொழுதும் இதுவாகத் தான் இருக்கும். " இன்று தேவையானதைச் செய்தேனா? என் வாழ்வில் இந்த வாரம்.. இந்த ஆண்டு.. என்னுள் இருக்கும் கிறிஸ்துவைப் பிரதிபலித்தேனா?

கிறிஸ்துவத்திற்கு நான் மாறியதிலிருந்து, ஆண்டவரோடு இணைந்து தொடர் பயணமாக அமைந்ததை நான் உணர்ந்தேன். ஒரு நாளும் நான் தனிமையில் வாழ்ந்ததில்லை என்று உண்மையாக உணர்ந்துள்ளேன். என்னுடைய வாழ்வில் மிகச் சிறந்த அல்லது மிக மோசமான சூழ்நிலைகளிலும் நான் தனியாக விடப்படவில்லை. இயேசு என்னுடைய தோழனாக இருந்திருக்கிறார். ஆம், என் வாழ்வின் மகிழ்ச்சியிலும், கண்ணீரிலும் இயேசு என் அருகில் இருந்துள்ளார். உண்மையில் இது ஆண்டவர் எனக்குத் தரும் திருக்காட்சி. - உண்மையென்னவென்றால், கடவுள் என்னைக் கைவிடவே இல்லை. நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் கடவுள் நம்மோடு வழி நடக்கிறார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், கடவுளிடம் நம்பிக்கைக் கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்"(யோவான்: 14:1) அவருடைய பிரசன்னத்தை நமக்கு உறுதியாக்குகின்றார். அது தந்தையின் பிரசன்னம். அவரே நம்மை மீட்டவர், அவர் தம்முடைய உயிரை கையளித்ததால், எந்த சூழலிலும் நாம் கைவிடப்பட மாட்டோம்.

இன்னும் கூடுதலாக, இன்றைய நற்செய்தியில், இயேசு கூறுகிறார்: "நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார்"(யோவான்: 14:10) இயேசு அவருடைய வார்த்தைகளின் வழியாக, நம் வாழ்வின் இலக்கு என்னவென்பதை மட்டும் கூறாமல் அதை எவ்வாறு அடைவது என்றும் கூறுகிறார். இறுதியாக. மகனைப் போல நாம் மாறினால், தந்தையின் விண்ணக வீட்டில் இடம் தயார் செய்வதைப் பற்றி(யோவான்: 14:2)கூறுகிறார். ஏனென்றால் அவரே வழியும், உண்மையும் வாழ்வும். (யோவான் 14:6)

நாம் பெற்றுக்கொண்டதைப் போல, நம்முடைய அடுத்திருப்பவருக்கும் நாம் தோழராக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம். இவ்வாறு செய்தால், நாம் நம்முடைய பயணத்தில், கிறிஸ்துவைப் போல வார்த்தையிலும், செயலிலும், செய்வதோடு, நிறைவாக, சிறிது சிறிதாக, முன்னேறி நம்முடைய விண்ணகத் தந்தையை நெருங்கி, முழுமையான நிறைவை அடைவோம். ✝

**இன்று உன்னில் அக்கறை கொள்ளும் இறைவன் , நாளையும் மற்றும் ஒவ்வொரு நாளும் உன்னை அக்கறையோடு பார்த்துக்கொள்வார்.**

– புனித பிரான்சிஸ் டி சேல்ஸ்

### இன்றைய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள்: 6: 1-7

திருப்பாடல்: 33: 1-2, 4-5, 18-19

1 பேதுரு: 2: 4-9

யோவான்: 14: 7-14

### வாரம் ஒரு வசனம்

கடவுள் நம்மை எப்போதும் கைவிடுவதில்லை



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நிறைவான வாழ்வு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 5ஆம் ஞாயிறு 09 - 17 மே 2020
தி.பணி 6 :1-7 தி.பா: 33: 1-2, 4-5, 18-19 1 பேதுரு 2: 4-9 யோவான் 14: 1-12
**" ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக ! " - தி.பா 33**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18-26) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| **பங்கு காணிக்கை** | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM13,910.00** | **RM11,330.00** | **RM930.00** |

*உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.*
*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: Public Bank Berhad
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: Church of Visitation
3.வங்கிக் கணக்கு எண்: 3121194612

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

**கொவிட் 19 முன்னிட்டு அடுத்த அறிவிப்புகள் வரும் வரை திருப்பலிகள் ஆலயத்தில் நடைபெறாது.**

பங்கு அலுவலகம் மே 1-12 வரை மூடப்பட்டிருக்கும்.
அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ள: நாதன் 012-684 0750) கொலின்ஸ் (016-364 7506)

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
கொவிட் 19 நோயால் இறந்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும்.
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

➢ **அவரே உங்களை நகர்த்துகின்றார்.**
அன்பான சகோதர சகோதரிகளே! நடமாட்டக் கட்டுப்பாட்டு இயக்கத்தில் சில தளர்வுகள் செய்திருப்பதால், உங்களில் பலர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கலாம். நடமாட்டக் கட்டுப்பாட்டின் போது நாம் கூடுதலான செபம் மற்றும் சிந்தனை போன்ற பல்வேறான நல்ல செயல்களை பழக்கப்படுத்திக் கொண்டிருக்கலாம். பல நேரங்களில் தேவையில்லாத பழக்கங்கள் கூட கொவிட் 19 ஆல் நன்மையான செயல்களாக மாற்றப்பட்டிருக்கும். எவையாக இருந்தாலும், ஒரே மாதிரியான வாழ்க்கை முறையிலிருந்து அனைத்து நல்ல செயல்களையும் கவனத்துடன் கற்றுக்கொள்வோம். இந்த கொவிட் அச்சுறுத்தல் காலம், இறைவன் முதன் முதலாக நமக்கென வகுத்த அதே வாழ்க்கையை வாழவேண்டுமென்ற விழிப்புணர்வை நமக்குத் தந்துள்ளது. எனவே, சுய நலம், பேராசையான வாழ்க்கையை விட்டு, புதிய வாழ்க்கைக்கு திரும்ப ஆரம்பிப்போம்.

ஆசீரும், அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக!
அன்புடன்: அருட்பணி சேவி மற்றும் கென்னத்

➢ **நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.**
(1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
(2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
(3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

➢ ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

➢ தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***
2020 மே 09- 15 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| **சனிக்கிழமை:** | 09-05-2020: | மாலை | 5.00 | ஆங்கிலம் |
| **ஞாயிறு** | 10-05-2020 | காலை | 7.30 | தமிழ்: |
| | | காலை | 9.00 | மாண்டரின் |
| | | காலை | 10.30 | ஆங்கிலம் |
| **வார நாள்: 13-05-2020 (புதன்)** | | மாலை | 7.00 | பேராயர் ஜூலியன் அவர்களுடன் செபமாலை |